வடமராட்சிக்கான
உதயன்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 74

புதன்கிழமை 08 பெப்ரவரி 2023 — தை 25 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

பக்கங்கள் 16

தமிழர்களுக்கு நீதிகோரி முன்னெடுக்கப்பட்ட

# கறுப்புநாள் பேரணி எழுச்சியுடன் நிறைவு

மட்டக்களப்பு, பெப்ரவரி 8

தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுவரும் அரச அடக்கு முறைகளை எதிர்த்தும், பல்வேறு பட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாலும், கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களாலும் முன்னெடுக்கப்பட்ட பேரணி மட்டக்களப்பில் நேற்று பேரெழுச்சியுடன் நிறைவுக்கு வந்தது.

»15



## தமிழருக்குத் தீர்வாக '13 பிளஸ்' வழங்குக!

தேரர்கள் யாழில் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு மேலதிகமாகவும் தமிழர்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட வேண்டுமென்று தேரர்கள் சிலர் இணைந்து யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுக் கூட்டாக அறிவித்துள்ளனர்.

»15

## 13இனை முற்றாக நீக்க மகாசங்கத்தினர் பேச்சு!

கொழும்பில் இன்று கூடுகின்றனர்

கொழும்பு, பெப். 8

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக மகாசங்கத்தினர் கொழும்பில் இன்று ஒன்று கூடித் தீர்மானமொன்றை அறிவிக்கவுள்ளனர்.

»15

## கிளிநொச்சியில் விபத்து குடும்பத்தலைவர் இறப்பு

கிளிநொச்சி, பெப். 8

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் க.ரேகன் (வயது-35) என்ற இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார்.

மகேந்திரா ரக வாகனமும் துவிச்சக்கர வண்டியும் நேருக்குநேர் மோதிக்கொண்டதில்

»15

## ஜனாதிபதி இன்று அக்கிராசன உரை

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து வெளிநடப்புச் செய்யத் திட்டம்

கொழும்பு, பெப். 8

ஜனாதிபதியின் அக்கிராசன உரைக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் சபையிலிருந்து

»15

## இராணுவ முகாம் அருகே பேரணி மீது தாக்குதல்!

அம்பாறை, பெப். 8

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களாலும், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களாலும் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்ட கரிநாள் பேரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

»15

## அரசாங்கத்தை எதிர்த்து மருத்துவர்கள் போராட்டம்

கொழும்பு, பெப். 8

அரசாங்கத்தின் முறையற்ற வரிக் கொள்கையைக் கண்டித்தும், மருத்துவப் பெருநெருக்கடியைத் தீர்க்குமாறு வலியுறுத்தியும் அரச

»15

## பிரதேச செயலாளர்கள் இன்று பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8

வரித் திருத்தத்துக்கு எதிராக சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் இன்று ஈடுபடுவதென பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவிப் பிரதேச

»15

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்

## சாள்ஸின் பதவிவிலகல்: ஜனாதிபதி ரணில் ஏற்பு

கொழும்பு, பெப். 8

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் திருமதி சாள்ஸின் பதவி விலகலை ஜனாதிபதி ரணில்

»15






# வடக்கிலிருந்து கிழக்குக்கு நகரும் மக்கள் பேரெழுச்சி

## நான்காம் நாள்




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில அதிர்வால் உருக்குலைந்தது துருக்கி பல்லாயிரக்கணக்கில் உயிரிழப்புக்கள்!



## தொடர்கின்றன மீட்புப் பணிகள்

## எங்கும் மரண ஓலங்கள்



பரிஸ், பெப்.6

துருக்கியின் தென் பிராந்தியத்தையும் சிரியாவின் பெரும் பிரதேசத்தையும் நேற்றுமுன்தினம் அதிகாலையும் பகல் பொழுதிலும் அடுத்தடுத்து உலுக்கிய பலமான இரண்டு நிலஅதிர்வு காரணமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 4ஆயிரத்து 361 ஆக உயர்ந்துள்ளது. 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். இவை நேற்றுக் காலைவரையான தரவுகள்.

இரு நாடுகளிலும் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மணித்தியாலமும் அதிகரித்துச் செல்லும் நிலையில், 20 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இடிந்து தரைமட்டமான குடியிருப்புக் கட்டங்களுக்குள் இன்னமும் பல நூற்றுக்கணக்கானவர்களைத் தேடும் பணிகள் நீடிக்கின்றன. அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, உக்ரைன், ரஷ்யா, இந்தியா உட்பட உலக நாடுகள் பலவற்றின உதவிக் குழுக்கள் துருக்கி நோக்கி விரைந்துள்ளன..

அதிகாலை 04.17 மணிக்கு ரிச்டர் அளவில் 7.8 புள்ளி அளவுடைய முதலாவது நிலநடுக்கம் துருக்கியின் தெற்குப் பகுதியைத் தாக்கியது.

அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தமையால் எழுந்து சுதாகரித்துப் பாதுகாப்பான இடங்களுக்குத் தப்பி ஓடக்கூடிய வாய்ப்புகள் எவருக்கும் இருக்கவில்லை.

தங்களையும் குடும்பத்தினரையும் வெளியேற்ற முடியாமல் அதற்கு அவகாசம் இன்றியே நொருங்குகின்ற கட்டடங்களுக்குள் படுத்த படுக்கையாக சிக்குண்டு மடியும் பேரவலம் பலருக்கும் நேர்ந்துள்ளது. கட்டடக் குவியல்களுக்குள் சிக்குண்டு காயங்களுடன் வெளியேற முடியாது துடித்த பெண்கள் உட்பட பலர் அங்கிருந்தவாறே உதவி கோரி அனுப்பும் குறுஞ் செய்திகள் மற்றும் காணொலிகள் நெஞ்சை உருக்குகின்றன.

இரண்டாவது நில அதிர்வு நண்பகல் ஒரு மணியளவில் அதே பிரதேசத்தை உலுக்கியது. அது ரிச்டர் அளவில் 7.5 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என்று அமெரிக்காவின் நிலஅதிர்வு ஆய்வு நிறுவனம் தெரிவித்தது.

நேற்றுமுன்தினமும், நேற்றுக் காலையும் அந்தப் பிராந்தியங்களில் ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறிய நில நடுக்கங்கள் பதிவாகியிருக்கின்றன. நேற்று செவ்வாய்க் கிழமை காலை துருக்கியின் மையப் பகுதியை 5.6 அதிர்வு கொண்ட புதிய நிலநடுக்கம் தாக்கியுள்ளது என்று ஐரோப்பிய நிலநடுக்க அவதான மையம் அறிவித்திருக்கிறது. பல மாடிகள் கொண்ட உயர்ந்த குடியிருப்புக் கட்டடங்கள் நிறைந்த நகரங்கள் சிதைந்து கிடப்பதும், எங்கும் மரண ஓலங்கள் ஒலிப்பதும், "உலகின் முடிவு நாள்" போன்று உணர வைத்தது என்று மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கூறுகின்றனர். மீட்பு நடவடிக்கைகள் தொடரும் நிலையில் அங்கு நிலவும் கடும் குளிரும், மழையும் மீட்பு நடவடிக்கைகளைத் தாமதப்படுத்துகின்றன.

சிரியாவின் உள்நாட்டுப் போர் காரணமாக லட்சக்கணக்கில் இடம் பெயர்ந்தவர்கள் துருக்கியின் எல்லைப் பகுதியை அண்டியே தற்காலிக வதிவிடங்களில் வாழ்கின்றனர். அந்தப் பிரதேசங்களிலும் பேரழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கு ஏற்பட்ட இழப்புக்களை கணக்கிட முடியாத நிலைமை காணப்படுகின்றது என்று மனிதாபிமானக் குழுக்கள் அறிவித்திருக்கின்றன. (எ-இ)

## விவரங்கள் அறிய தொலைபேசி இலக்கங்கள்

கொழும்பு, பெப்.8

துருக்கியில் உள்ள இலங்கையர்களைப் பற்றி விசாரிப்பதற்கு அல்லது தகவல்களை வழங்குவதற்கு துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் அவசர தொலைபேசி இலக்கங்களை அறிவித்துள்ளது.

00903124271032 அல்லது 00905344569498 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## துருக்கிக்கு முதல்நாடாக உதவிசெய்தது இஸ்ரேல்




அங்கரா, பெப். 8

கடும் நிலநடுக்கத்தால் துருக்கியில் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து துருக்கிக்கு முதலாவது நாடாக 150 பேர் அடங்கிய மீட்புக்குழுவை அனுப்பிவைத்துள்ளது இஸ்ரேல்.

மத்திய கிழக்கின் வல்லரசு யார்? என்ற போட்டியில் இஸ்ரேலும் துருக்கியும் நீண்டகாலப் பகையாளிகளாக உள்ளன. மத்திய கிழக்கில் இடம்பெறும் அதிகாரப் போட்டிகளால் இந்த இரு நாடுகளுக்கும் இடையில் கடந்த பல தசாப்தமாகவே பகையுணர்வு மேலோங்கியுள்ளது. இந்த நிலையில், துருக்கியில் இடம்பெற்ற பேரழிவுக்குப் பின்னர் முதலாவது நாடாக 150 பேருடன் மீட்புக் குழுவையும், உணவுப் பொருள்களையும் இஸ்ரேல் அனுப்பிவைத்துள்ளமையானது நெகிழ்ச்சியான சம்பவமாகப் பதிவாகியுள்ளது. (ம)

## இலங்கையர் 13 பேர் பாதிப்பு: ஒருவரை தேடும் பணி தீவிரம்




கொழும்பு, பெப்.8

துருக்கியில் ஏற்பட்ட நில அதிர்வில் சிக்கி இலங்கையர்கள் 13 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், பெண் ஒருவர் காணாமற்போயுள்ளார் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட இலங்கையர்கள் தற்போது பாதுகாப்பாக உள்ளனர் என்றும், காணாமற்போனவர் தொடர்பான தகவல்களைத் திரட்டும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

காணாமற்போன இலங்கைப் பெண்ணின் கையடக்கத் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று துருக்கிக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அந்தப் பெண் தங்கியிருந்த கட்டடம் நிலநடுக்கத்தில் சேதமடைந்துள்ளது என்று முன்னர் கூறப்பட்டிருந்த நிலையில் நிலநடுக்கம் ஏற்படுவதற்கு முன்னர் அந்தக் கட்டடத்தில் இருந்தவர்கள் வெளியேறியுள்ளனர் என்று தூதரகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

## துருக்கிக்கு உதவ இலங்கை தயார்

கொழும்பு, பெப்.8

நிலநடுக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள துருக்கிக்கு உதவிகளை வழங்க இலங்கை தயார் நிலையில் உள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அங்கு மீட்பு நடவடிக்கைக்காக இராணுவ மருத்துவ மற்றும் பொறியியல் படைகள் உட்பட 300 பேர் கொண்ட இராணுவக் குழுவொன்றை அனுப்பி வைப்பதற்கு இலங்கை தயாராக உள்ளது என்றும், கோரிக்கை விடுக்கப்பட்டால் அவர்கள் அங்கு அனுப்பப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 4 ஆயிரத்து 365 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். அங்கு மீட்பு நடவடிக்கைகள் தொடரும் நிலையில், உயிரிழப்புக்கள் 20 ஆயிரம் வரை அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடமியன் வரணி தான்தோன்றி கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த மணவாளக்கோலத்தின் 108 சங்காபிஷேகம், மன்னன்குறிச்சி சங்காபிஷேக பிரதமகுரு குமார வித்தகஜோதி சிவசிறீ தில்லையம்பலக் குருக்கள் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (எ-14-159)



கிளிநொச்சி மாவட்டத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய மாணவன் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று மாவட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

ஜோர்ஜ்பாலசிங்கம் பிரோன்சன் என்ற மாணவனே 178 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். (ய-214)



# மாவிட்டபுரம் கந்தசுவாமி தைப்பூச திருமஞ்ச பவனி

யாழ்ப்பாணம், பெப். 8

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூச லட்சார்ச்சனை உற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்புற நடைபெற்றது.

மாலை 6.30 மணிக்கு சண்முகார்ச்சனை இடம்பெற்று தொடர்ந்து வள்ளி தெய்வானை சமேதராக சண்முகப்பெருமான் உள்வீதியில் எழுந்தளினார். தொடர்ந்து திருமஞ்சத்தில் ஆரோகணித்து வீதியுலா வந்து அடியவர்களுக்கு அருட்காட்சியளித்தார். (ச-66)



# ஐயப்பன் ஆலயத்தில் தைப்பூச ஆராதனை

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ்.கொக்குவில் கிழக்கு ஐயப்பன் ஆலயத்தில் தைப்பூசத் திருநாள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆலய அறங்காவலர் எஸ்.ஜெகதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

ஆலய முன்றிலில் விசேட பொங்கலிட்டு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றதுடன் அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. (ச-66)



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் தைப்பூச திருநாளை முன்னிட்டு இடம்பெற்ற மணவாளக்கோல உற்சவத்தில் சுவாமி அடியவர்கள் சூழ வீதியுலா வந்தார். (ச-17)



கொடிகாமம் - இயற்றாலை அ.மி.த.க பாடசாலையில் வரலாற்றில் முதல் தடவையாக புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவி ஒருவர் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளார்.

சி.விந்ஜா என்ற மாணவி 183 புள்ளிகளைப் பெற்று தென்மராட்சி வலயத்தில் முதலாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கும் வலயக் கல்விக்கும் பெருமை சேர்த்துள்ளார். (ய-159)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு

2022ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியிடப்பட்டன. கிடைக்கப்பெற்ற பாடசாலைகள் சிலவற்றின் பரீட்சை முடிவுகள் வருமாறு...

## இயற்றாலை அ.மி.த.க பாடசாலை

தி.விந்ஜா 183, கு.அகிஷா 169, சு.தருசானன் 158, ப.சஹானா 156, க.கஜானா 155, சி.ஜதுசா 154, யோ.அபிஷனா 153, சி.பபிராஜ் 150, ச.கனுசா 139, சா.சாருயன் 137, ம.சங்கயன் 136, ஜெ.திஷாலி 132, க.துவிசன் 126, சி.அர்வினா 126, ய.வர்ஷிகன் 119, ல.தபிஷனா 111, ச.சந்தோஷ் 111, வி. வேணுஜா 105, இ.அபிஷன் 101 (ய-159)

## யா/மட்டுவில் வடக்கு அ.த.க. பாடசாலை

அ.தேவிஷ்ணா- 160, த.சஜீஷா -154, பா.காருசன்- 143.

## யா / நல்லூர் சென்.பெனடிக்ற் றோ.க.வித்தியாலயம்

சிவநந்தவர்மன் லக்ஷன் -180, சன்றோயஸ் குயின்ரஸ் போல் றொபின்சன் -175, பகிதரன் கவிஷாந் -169, மரிய தோமஸ் எடிசன் மரிய அபிஷானி -169, யோகசுகிர்தன் திவிஷன் -168, சுந்தரலிங்கம் டிஷானி -167, ராகுலன் உதேஷ்ணா -167, விஜயகுமார் விஷான் -165, துஸ்யந்தன் டிலுஷா -165, ஸொலூயிஸ்றோஸன் அபக்ஷன் 165, தயானீசன் விதுனா -163, ஜெயறூபன் மதுராங்கன் -160, ஸ்கந்தராஜா வைஸ்ணவி -159, கிரிதரன் தட்ஷிகன் -156, திவாகரன் தனிஸ் -165, ஜீவாகரன் தானிகா -156, சபேஸ்வரன் ஆருஷன் -155, குணசேகரன் சஞ்சயா -154, சதீஷன் லக்ஸ்மிதன் -154, புலெந்திரன் துலக்சிகா -154, றொஷான கிளமென்ரைன் கபோறின்யா -154, நந்தகுமார் அப்ஷரா -154, செய்குலசிங்கம் கம்ஷாலன் -153, கமலதாசன் கெனானி -152, பிறின்சன் பகீஷன் -151, தர்சில் நிக்சன் கனீபர் -151, கோபூர சதுர்ஷிகா -150, பாலகிருஸ்ணன் ஜஸ்மிகா -150, ராஜேந்திரன் பிரதீஷா -148, வசந்தபாலன் ஆரோன் -148, சுதாகரன் சஜீவ் -148, ஜெகநாதன் ஜெறோமியா -147, நிரோஷன் நிஷ்மிகா -147, றமேசன் நக்சின் -145, காண்டீபன் பவிஷ்னா -145, ஜெயமுகுந்தன் சதுர்ஜிகன் -144, நாகதீபன் கீர்த்திகா -144, விநோத் மேரி ஏஞ்சலின் -143, உஷாந்தன் அகிலேஷ் -143.

## சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை

முரளீதரன் சோபிதா -176, பிரசன்னா நவ்யா -173, செந்தூரன் கவினாஷ் -173, ஜசிந்தன் அபிலஷா -172 , நேசரூபன் வர்சன் -170, அருட்கரன் மானுசன் -167, செல்வகுமார் சானுஜன் -166, மதிபரன் ஆகாஷ் -166, தயாக்குமரன் அபிசங்கர் -165, பிரகலாதன் ஜோயல் -164, ஜெயக்காந்தன் மதுமிரா -163, தீபன் லக்ஸ்மிலன் -162, கஜேந்திரசர்மா காயத்திரி -162, சசிக்குமார் சந்தோஷி -161, கிரிதாஸ் பவிஷன் -161, உதயகுமார் ஆரவின் -161, ஜீவகுமார் அஸ்வின் -155, பிரதீப் டனிஸ் -155, துவாரகன் அபிரோசன் -154, மயூரதன் பகிஷ்கன் -148, விமல்ராஜ் டிருத்திகா -147, ஜனகன் சுருதி -145, ஜெபதாஸ் அஸ்விநாத் -144, கஜேந்திரன் சிவானுஜன் -155, அகிலன் ஆரங்கன் -154, தினேஸ் திசாந் -152, மயூரன் பிருந்தாபன் -149, ஜெயக்குமார் ஓவியா -147, மதிவதனன் ஹிருத்திக் -146, கந்தராசா விஸ்ணுப்பிரியன் -144, சயந்தன் ஜெரிக்சஞ்ஜேய் -168, தவச்செல்வம் சயானா -168, விமலகுமார் பவிஷன் -166, சுவீதன் கோபிதன் -160, சுதாகர் லதுன் -160, ஜீவராஜ் லக்மிகன் -152, சிவகுமாரன் கீதாசாரன் -150, றமணண் ஆருஜன் -147, சுதாகரன் ஆதிகா -147.

## யா/அச்சுவேலி ஆரம்ப பாடசாலை

ஜெயராஜா சாஜித் -162, பிரான்சிலின் குணநாயகம் மகிழ்நங்கை -161, நிறோஜன் நிதாருகா -158, சுதர்சன் அஸ்வினி -154, சத்தியரஞ்சன் அக்ஷிகா -150, அருளானந்தம் யதுசாந் -150, குகதாசன் ஆத்மிகா -144, மணிவண்ணன் ஜென்சிகா -143

## யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

[illegible]தவி -163, பத்மநாதன் கோஷியா -151, தமிழரசன் ரம்மியா -150, [illegible]ணன் தஷ்வினி -149, திருமாவளவன் லிரோசன்குமார் -149

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## காற்றில் பறக்கும் வாக்குறுதி

இலங்கை அரசாங்கத்தின் மீது ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் ஒரு தடவை தனது அதிருப்தியைப் பதிவு செய்திருக்கின்றது. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பாகவே ஐரோப்பிய ஒன்றியம் இந்த அதிருப்தியை வெளியிட்டிருக்கின்றது. நீதி மறுஆய்வு இல்லாததாலும், அரசியல் நோக்கங்களுக்காக அது பயன்படுத்தப்படும் தன்மை காணப்படுவதாலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரச்சினைக்குரியதாக இருக்கின்றது என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைபி.

பயங்கரவாதத் தடைச் சட்டம் சர்வதேசத் தராதரங்களுக்கு ஏற்ப மாற்றப்படும் என்று 2017ஆம் ஆண்டு இலங்கை உத்தரவாதம் தந்திருந்திருந்தபோதும், இலங்கை முன்னெடுத்த நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லை என்பதே ஐரோப்பிய ஒன்றியத்தின் குற்றச்சாட்டு. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மாற்றங்கள் தேவை என்பதில் இலங்கை மக்கள் மத்தியில் பரந்துபட்ட கருத்து உடன்பாடு காணப்படுகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஐரோப்பிய ஒன்றியமும், மேற்குலக நாடுகளும் பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் பேசுவது இது முதற்றடவையல்ல. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்று அவை வலியுறுத்தி வந்தநிலையில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என்று இலங்கை ஒவ்வொரு முறையும் வாக்குறுதியளித்திருந்தது. அந்த வாக்குறுதியை இற்றைவரை ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் நிறைவேற்றவில்லை.


சர்வதேச அழுத்தங்களை அடுத்து, கடந்த ஆண்டு ஆட்சியிலிருந்த கோத்தாபய ராஜபக்ச அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என்றும், சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச் சட்டம் மாற்றப்படும் என்றும் அறிவித்திருந்தது. அதே நேரம் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரயோகிக்கப்படாது என்றும் சர்வதேசத்துக்கு சத்தியம் செய்திருந்தது. இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்ததும் அந்த வாக்குறுதி காற்றில் பறக்க, அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டனர்.

சர்வதேச நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றபோதும் இலங்கை அதைத் தொடர்ந்தும் உதாசீனம் செய்தே வருகின்றது. பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சர்வதேச நாடுகளின் உதவிக் கரங்களில் நாள்களை நகர்த்திக் கொண்டிருக்கும் போதுகூட, சர்வதேச நாடுகளால் இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்காமல் வெறும் வாய்வார்த்தைகளிலும், அறிக்கைகளும் மட்டுமே காகிதப்போர் நடத்துகின்றனவே தவிர உருப்படியான நடவடிக்கைகளை எடுப்பதில்லை. இந்தத் தைரியத்தில் தான் இலங்கையும் வாக்குறுதிகளைக் கொடுப்பதும், பின்னர் அவற்றை மறந்ததுபோல நடிப்பதுமாக தன் திருவிளையாடலைத் தொடர்கின்றது. எனவே இனியாவது ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச நாடுகள் இந்த விடயங்களில் வெறுமனே அதிருப்தியை மட்டும் தெரிவித்துக் கொண்டிருக்காது, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான அழுத்தங்களை இலங்கைக்கு கொடுக்கவேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

"நூறு பேர் சேர்ந்து ஒரு முகாம் அமைக்கலாம். ஆனால், ஒரு நல்ல இல்லறம் அமைய ஒரு பெண் வேண்டும்."

– ஹோமர்



### பயங்கரவாதத் தடைச் சட்டம்

## இலங்கை அரசின் போக்கால் ஐரோப்பிய ஒன்றியம் ஏமாற்றம்

கொழும்பு, பெப்.8

இலங்கையில் பயங்கரவாதச் சட்டம் இன்னமும் பிரச்சினைக் குரியதாகவே இருக்கின்றது. இதற்குத் தீர்வைக் காண்பதற்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் போதுமானவை அல்ல என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்தது.

நீதி மறு ஆய்வு இல்லாததாலும், அரசியல் நோக்கங்களுக்காக அது பயன்படுத்தப்படும் தன்மை காணப்படுவதாலும் பயங்கரவாதத் தடைச் சட்டம் பிரச்சினைக்குரியதாக இருக்கின்றது என்று இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைபி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

பயங்கரவாதத் தடைச் சட்டம் தங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுகின்றது என்று பல அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மாற்றங்கள் தேவை என்பது தொடர்பாக இலங்கை மக்கள் மத்தியில் பரந்துபட்ட கருத்து உடன்பாடு காணப்படுகின்றது.

2017ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப மாற்றுவோம் என்று இலங்கை உறுதியளித்தது. கடந்த அரசாங்கம் முன்மொழிந்த மாற்றங்களை நாம் வரவேற்கின்றபோதும், அவை போதுமானவை அல்ல.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதில்லை என்று முன்னைய அரசாங்கம் தீர்மானித்திருந்தபோதும், அது தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றமை ஏமாற்றம் அளிக்கின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்படும் தேசிய பாதுகாப்புச் சட்டம் சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ப அமைந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்-என்றார். (எ-இ)

## ரணிலை நம்பும் மூன்

கொழும்பு, பெப்.8

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புத்திசாலித்தனமான தலைமைத்துவத்தின் கீழ் இலங்கையில் ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உள்ளது என்று ஐக்கியநாடுகளின் முன்னாள் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கை ஜனநாயகத்தையும், பொருளாதார அபிவிருத்தியையும் அடைவதற்கான சாத்தியம் உள்ளது எனக் கருதுகின்றேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல முடியும் என்று நம்புகின்றேன்-என்றார். (எ-இ)

### நாளை

09.02.2023

வியாழக்கிழமை

தை 26

சுபநேரம் : 08.05 - 09.35

ராகுகாலம் : 02.05 - 03.35

சங்கடஹர சதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருடிகாடு மயானத்துக்கு எரிகொட்டகைகள் தேவை

### இந்திராபுரம் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 8

பளை வேம்பொடுகேணி கிராம அலுவலர் பிரிவிலுள்ள குருடிகாடு மயானத்தை புனரமைப்பு செய்து எரிகொட்டகைகள் அமைத்து வழங்குமாறு இந்திராபுரம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளி மேற்குப் பகுதியின் இத்தாவில், வேம்பொடுகேணி, முகமாலை, கச்சார்வெளி, செல்வபுரம் மற்றும் இந்திராபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இந்த மயானத்தையே நீண்ட காலமாக பயன்படுத்தி வருகின்றனர்.

கடந்த 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னர் வெடிபொருள்கள் காரணமாக மயானப் பகுதிக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. கிராம மக்கள் இறுதிக்கிரியைகளுக்காக 5 கிலோமீற்றர் தூரத்திலுள்ள மயானங்களுக்குச் சடலத்தை கொண்டுசெல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தநிலையில் கடந்த ஆண்டு மயானப்பகுதியில் வெடிபொருள்கள் அகற்றப்பட்டு பொதுமக்கள் பாவனைக்கு விடப்பட்டது.

ஆயினும் மயானம் புனரமைப்பின்றி திறந்தவெளி போன்று காணப்படுவதுடன் எரிகொட்டகையும் இன்றியே உள்ளது. எனவே உரிய அதிகாரிகள் குறித்த மயானத்தை புனரமைப்புச் செய்து எரிகொட்டகை அமைத்துதர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (ச-9)

### குளங்கள் வான்பாயும்போது

# நன்னீர் மீன்களைப் பாதுகாக்க உடன் நடவடிக்கைகள் தேவை

### நன்னீர் மீன்பிடிச் சங்கங்கள் வேண்டுகோள்

கொழும்பு, பெப். 8

குளங்கள் வான் பாய்கின்றபோது நன்னீர் மீன்கள் குளத்தில் இருந்து வெளியேறாமல் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என நன்னீர் மீன்பிடிச் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.



இது தொடர்பில் அந்த அமைப்புக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பல்வேறுபட்ட அமைப்புக்களின் உதவியுடன் நன்னீர் மீன் குஞ்சுகள் குளத்தில் விடப்பட்டு வளர்ந்து வரும் நிலையில் குளங்கள் திடீரென வான் பாய்வதன் காரணமாக வெள்ளத்துடன் மீன்கள் பெருமளவில் வெளியேறி கடலைச் சென்றடையும் நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் வான் பகுதியில் (வான்பாயும் இடத்தில்) மீன்கள் வெளியேறாத வகையில் வலையமைப்புகள் நிரந்தரமாக உருவாக்கப்படுவதன் மூலம் மீன்களைக் குளங்களில் இருந்து வெளியேறாமல் தடுக்கலாம்.

கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏழு குளங்கள் திடீரென வான் பாய்ந்ததன் காரணமாக குளங்களிலிருந்து பெருமளவு மீன்கள் கடலைச் சென்றடைந்துள்ளன. எனவே இதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளன. (ம-14-13)



## ஆண்டு நிறைவையொட்டி மீனவர்களுக்கு போட்டிகள்

கிளிநொச்சி, பெப். 8

இரணைமடு நன்னீர் மீனவ கிராம அமைப்பின் 36ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இரணைமடுக் குளத்தில் மீனவர்களுக்கிடையிலான படகு ஓட்டப்போட்டி, கயிறு இழுத்தல், சறுக்கு மரம் ஏறுதல், நீச்சல் போட்டி உள்ளிட்ட போட்டி நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் க.சிறீமோகன், தேசிய உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர், கிராம மக்கள், மீனவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (எ-14.113)

## கும்பாபிஷேகம்

சாவகச்சேரி , பெப். 8

சாவகச்சேரி நகர் வாரிவனம்பதி ஸ்ரீ அமிர்தபாசினி அம்பிகை சமேத சந்திரசேகர வாரிவனநாத சிவன் தேவஸ்தான நவகுண்டபச்ச பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.34 மணி தொடக்கம் 10.13 மணிவரை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை 9.35 மணி தொடக்கம் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு இடம்பெறவுள்ளது. (எ-14,159)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைப்பது மகிழ்ச்சி தரும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**இடபம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச்சிறப்பாகச்செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிணக்குகள் நீங்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு.

**கடகம்:** முயற்சிகள் சாதகமாக முடியும். பிள்ளைகள் வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவுமிருக்காது. செலவுகள் ஏற்படும். பணவரவுக்கும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். அனுசரித்துச் செல்வது நல்லது. ஆரோக்கியம் மேம்படும். எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். அனுகூலம் உண்டாகும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவு செய்ய நேரிடும். மற்றவர்களுடன் வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். பிற்பகலுக்கு மனதில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயல்படுவீர்கள்.

**மகரம்:** எதிர்பாராத பணவரவு இருந்தாலும் திடீர் செலவுகளும் ஏற்பட்டு திக்கு முக்காட வைக்கும். காரியம் இழுபறியாகும். பொறுமையுடன் நடந்துகொள்வது நல்லது.

**கும்பம்:** உற்சாகமான நாள். காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை வாழ்க்கைத்துணை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்களால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும்.

## கசிப்புடன் இருவர் கைது

கிளிநொச்சி, பெப். 8

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கசிப்புடன் நெத்தலியாறு பகுதியில் ஒருவரும் புளியம்பொக்கணைப் பகுதியில் ஒருவருமாக இருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரிடமும் 38 லீற்றர் கசிப்பு, 118 லீற்றர் கோடா, கசிப்புக் காய்ச்சப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

அதன்பின்னர் இருவரும் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-14.113)

## வாரிவனம்பதி ஆலய குடமுழுக்கு உற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 8

சாவகச்சேரி வாரிவனம்பதி சந்திரசேகர் வாரிவனநாத சிவன் ஆலய நவகுண்டபட்ச பிரதிஷ்டை மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.34 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று புதன்கிழமை காலை 9.45 மணிமுதல் நாளை மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை





"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற." -வள்ளுவர்

■ பிறைநிலா கிருஸ்ணராஜா




## மண்ணின் கதைகளைச் சொல்லும்

# வெந்து தணிந்தது காடு!

**"மனித சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியில் ஒருபிடி மண் என்பது முக்கியமான இடத்தைப் பிடித்திருக்கிறது. மண்ணுக்காகவே வரலாறுகளும் படைக்கப்பட்டிருக்கின்றன. அந்தவகையில் மண்ணின் உரிமைக்காகப் போராடிய ஒரு மனிதக் குழுமத்தின் வாழ்வியல் வடுக்களை படமாக்கியிருக்கிறது இயக்குநர் மதிசுதாவின் 'வெந்து தணிந்தது காடு'."**

எமது வாழ்வியல் அம்சங்களைப் பற்றிப் பேச வேண்டிய படைப்புக்களை நாம் சர்வதேச தரத்துக்கு எடுத்துச்செல்லவேண்டியது ஒவ்வொருவரினதும் கடமை என்கின்ற வகையில் இந்தத் திரைப்படமானது வெளியாக முன்னரே 16 நாடுகளில் இடம்பெற்ற விருது விழாக்களில் 30 சர்வதேச விருதுகளைப் பெற்று அனைவரதும் கவனத்தையும் ஈர்த்து கைதட்டல்களைப் பெற்றுள்ளது.

எங்கள் வாழ்வியலில் போர் என்பது அசைக்கமுடியாதவொரு இடத்தைப் பிடித்திருக்கின்றது. போர் தின்ற மண்ணும் மிகுதியாய் எஞ்சியிருக்கும் மனிதர்களும் தான் இதற்குச் சாட்சியாக உள்ளனர். இந்த வாழ்வியற்போக்கில் இன்றுவரை அதன் தாக்கம் உணரப்பட்டுக் கொண்டிருப்பதோடு, இந்த மனிதர்கள் போரில் தொலைத்தவற்றை இன்றுவரை தேடி அலைந்துகொண்டு தானிருக்கின்றார்கள்.

இந்தத் திரைப்படம் போரைப்பற்றியதல்ல ஆனால், போரின் மையச் சுழலில் சிக்கியிருந்த மனிதர்களைப்பற்றிய கதை. அத்தனை மனிதர்களுக்கும் சாட்சியாக திரைப்படத்தில் இத்தனை மனிதர்களும் வாழ்ந்து முடித்திருக்கிறார்கள்.

மக்களின் மன உணர்வுகளை அரசியல் கலப்பில்லா யதார்த்தமாக வெளிப்படுத்தியிருக்கும் இந்தத் திரைப்படத்தின் ஒவ்வொரு வசனங்களும் மிகவும் முக்கியமானவை.

மேலும் திரைப்படமானது கடந்த நான்கு வருடங்களாகக் குழுமப் பணச் சேகரிப்புமுறையின் மூலமாக தன்னார்வலர்களிடமிருந்து பணத்தைச் சேகரித்து, ஐ போன் கமரா மூலமாகப் படமாக்கப்பட்டது. வெளிநாடுகளில் இந்த இரண்டு விடயங்களும் சகஜமானவையாகக் காணப்பட்டாலும் எங்களுடைய சினிமாத் தளத்துக்கு இவை புதியவை. இன்னுமின்னும் இந்த முறைகளைப் பயன்படுத்தி தொழில்நுட்பச் சீராக்கலோடு காத்திரமான படைப்புக்களை, நாம் சர்வதேசத் தளத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

திரைப்படத்தின் இறுதியில் வைக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு பாடலும் அதன் வரிகளும் இசையும் இந்த வாழ்வியலைத் தெளிவாகச் சொல்லியுள்ளதோடு திரைப்படத்தலைப்பும் இந்தக் கதைகளோடு மிகவும் பொருந்திப்போகின்றது.

இந்தத் திரைப்படத் தலைப்புக்கு கடந்த ஆண்டுகளில் தென்னிந்திய சினிமாவோடு முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தமையையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

இந்தத் திரைப்படமானது கடந்த ஜனவரி மாதம் 29ஆம் திகதி, சிறப்புக் காட்சியாக யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் காண்பிக்கப்பட்டிருந்தது.

எதிர்வரும் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளிலும் யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கிலும் பருத்தித்துறை எஸ்.எஸ். திரையரங்கிலும் (12ஆம் திகதி) திரைப்படத்தை அனைவருக்குமான காட்சிகளாகக் காண்பிக்கவுள்ளார்கள்.

இந்தத் திரைப்படத்தின் திரைக்கதை, கதை, வசனம், தயாரிப்பு என்பவற்றை மதிசுதாவும், காட்சிக் கவ்வலை பிரதீபன் செல்வமும், கத்தரித்து ஒட்டலை ஏ.மணிகண்டனும், இசைச்செருகலை சிவ பத்மயனும், ஒலிச்செருகலை கே.வி.சுப்ரமணியனும், கணினிக் காட்சி உருவாக்கத்தை விபிசன் ரவீந்திரனும், நிறக்கலவையை டினுந்து ஜேகொடவும் மற்றும் ஏனைய தொழில்நுட்பவேலைகளில் பலரும் இணைந்து மேற்கொண்டிருக்கின்றார்கள்.

இறுதிப் போரின் வாழ்வியல் பதிவுத் திரைப்படம்






வெந்து தணிந்தும் தணியாததாக எம் வாழ்வின் தேடுதல்கள் இன்றுவரை தொடர்ந்து கொண்டேயிருக்க எமது வாழ்வியலின் பிரதியொன்றே இந்த 'வெந்து தணிந்தது காடு' திரைப்படம். எதிர்காலச் சந்ததிக்கு ஒரு வாழ்வியலின் படிமங்களை அசையும் படிமமாக கையளிக்க விரும்புகிறீர்களென்றால் குடும்பமாக இந்த படைப்பை ஒவ்வொருவரும் கொண்டாட முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் வைரவிழாவும் சைவமாநாடும்

இலங்கை சைவப் புலவர் சங்கம் நடத்திய வைர விழாவும், சைவப் புலவர் பட்டமளிப்பு விழாவும், சைவ மாநாடும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரண்டு அமர்வுகளாக நடைபெற்றன.

காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி புராதன வாரிவனேஸ்வரர் ஆதியில் எழுந்தருளியிருந்த இடத்தில் அமைந்துள்ள சிவன் கோவிலில் இடம்பெற்ற வழிபாட்டின் பின்னர் சந்தான குரவர்கள் எழுந்தருள விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

**முதலாம் அமர்வு**

முதலாவது அமர்வு காலை 9 மணிக்கு சாவகச்சேரியில் அமைந்துள்ள பூமாரி மண்டபத்தில் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை அரங்கில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சைவப்புலவர் சி.க.கமலநாதன் தலைமையில் இடம்பெற்றது. அமர்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறீசற்குணராஜா, சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனன், யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை இந்து கற்கைகள் பீடத் தலைவர் கலாநிதி ச.முகுந்தன், யாழ் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை இந்துக் கற்கைகள் பீடத் தலைவர் கலாநிதி பொ.சந்திரசேகரம், கௌரவ விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் விசேட அதிதிகளாக மீசாலை வடக்கு ஆலடிப்புலம் சிறீநடராஜ கந்தசுவாமி ஆலய பிரதம குரு ஆதீனகர்த்தா சிவசிறீ கு.சிறீகாந்தக் குருக்கள் வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய பிரதம குரு சிவசிறீ இ.குமாரசுவாமிக் குருக்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்




தொடர்ந்து சைவாகம பூஷணம் விருது, சிவநெறிப் புரவலர் விருது, பௌராணிக ஞான செம்மல் விருது, சைவப்புலவர் மணி விருது, சிவநெறிப் பிரகாசர் விருது போன்ற விருதுகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து வைரவிழா சைவநாதம் மலர் வெளியீடு இடம்பெற்றது. சைவசித்தாந்த அறக்கட்டளை நிதியம் பிரதம விருந்தினரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

**இரண்டாம் அமர்வு**

இரண்டாவது அமர்வு மாலை 2.30 மணிக்கு சைவப்புலவர் க.செல்லத்துரை அரங்கில் சைவப் புலவர் சிவானந்தசோதி ஞானசூரியம் (சங்க உபதலைவர்) தலைமையில் இடம்பெற்றது. இரண்டாவது அமர்வின் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட முன்னாள் தலைவரும் சைவசித்தாந்தத்துறை முதுநிலை விரிவுரையாளருமான கலாநிதி திருமதி விக்கினேஸ்வரி பவனேசன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# இந்து சமயப் பேரவையில் சிறப்புற்ற 'சிவபூஜா மாநாடு'

யாழ்.இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் சிவபூஜா மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை கந்தர்மடத்திலுள்ள நடராஜர் மண்டபத்தில் பேரவையின் தலைவர் சிவஸ்ரீ. ஈசான சக்திகிரீவன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், தருமை ஆதீன திருச்சி மௌனமட மற்றும் திருக்கேதீச்சர மடத்தின் ஸ்ரீலஸ்ரீ மீனாட்சி சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் பங்கேற்று ஆசியுரை நிகழ்த்தினர்.

மாநாட்டில் 6 சமூகப் பெரியோர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். தெல்லிப்பழை 'தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலயப் பெருந் தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாருக்கு 'செந்தமிழர் பழிதீர்த்த தெய்வப்பாவை' எனும் விருதும் முன்னாள் இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ.ச.மகேஸ்வரக் குருக்களுக்கு 'சிவாகமஞானி' எனும் விருதும் தேகாந்த நிலையில் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் 'திருப்பணிக் காவலர்' விருது பிரபல வர்த்தகர் சண்முகம் சிவஞானமுக்கும் 'திருப்பணித் தவமணி' விருது பிரபல வர்த்தகர் சிதம்பரப்பிள்ளை நேசேந்திரனுக்கும், கலாநிதி சுவர்ணா நவரட்ணமுக்கு 'மங்கையர்க்கு தனியரசி' விருதும், திருமதி மாலினி அஜந்தனுக்கு 'செந்தமிழ் தாரகை' விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (66)







இணுவில் பொதுநூலக சிறுவர் திறன் விருத்தி மைய மாணவர்களது வருடாந்த ஆங்கில தின நிகழ்வு தலைவர் எஸ்.புரந்தரா தலைமையில் கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் மாணவர்களது ஆங்கில மொழியிலான பேச்சு பாடல்கள், குழு நடனம் உள்ளிட்ட கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

தரம் ஒன்றில் இணையும் மாணவர்களுக்கான பட்டமளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதமர் விருந்தினராக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆங்கில மொழிக்கான ஆசிரிய வளவாளர் எஸ்.சுரேஷ்குமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வர்த்தகம் மற்றும் மொழிகள், தொழில்நுட்பவியல் கல்லூரித் தலைவர் ரி. ராஜ்குமார், யாழ். சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் திருமதி கம்சானந்தி பிரபாகரன், ஓய்வுபெற்ற ஆங்கில வளவாளர் கே.சூரியகுமாரி ஆகியோர் கலந்துசிறப்பித்தனர்.





யாழ். இந்து சமயப் பேரவையால் கலாநிதி சுவர்ணா நவரத்தினத்துக்கு 'மங்கையர்க்கு தனியரசி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. தனி ஒரு பெண்மணியாக சைவ சமயத்துக்கும் சமூகத்துக்கும் ஆற்றிவரும் சேவையை கௌரவிக்கும் முகமாக இந்த விருது வழங்கப்பட்டது. (20)

## புதன்பொய்கைக்கு எழுதுங்கள்

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புக்கள் விமர்சனங்கள், கவிதைகளை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு. உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளையும் புகைப்படங்களுடன் அனுப்புங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

புதன்பொய்கை, உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி : **puthanpoigai@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக அம்சங்களுக்குச் சான்றாகவுள்ள மாவை சித்திவிநாயகர், அம்பாள் ஆலயம்

ர.சுஜிந்தன்
நான்காம் வருட மாணவன்
சைவ சித்தாந்தத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

இயற்கையோடு ஒன்றிணைந்து நாட்டுப்புற மக்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த சிறு தெய்வ வழிபாடு சமுதாயப்பெறுமானங்களால் காலஓட்டத்தில் பெருமரபுக்குள் உள்வாங்கப்படிருப்பதைக் காணலாம்.

அத்தகைய ஒரு தெய்வீக அம்சத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது மாவை சித்தி விநாயகர் அம்பாள் ஆலயம்.

இலங்கை வள நாட்டின் வடபகுதியாம் யாழ். மாவட்டத்தின் வலிவடக்கு பிரதேசத்தில் தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து காங்கேசன்துறை செல்லும் வீதியில் மாவிட்டபுர அரசடிச் சந்திக்கு அருகாமையில் இந்த ஆலயம் அமைவு பெற்றுள்ளது. மக்களின் செயற்திறன் வேகத்தினாலும் சமூக நல்லிணக்கத்தினாலும் நிர்வாகக் கட்டமைப்பும் முறையே ஒருங்கமைக்கப்பட்டு கட்டடக்கலைக்கலை பரிமாணங்களோடு வளர்ச்சி கண்ட பெரிய ஆலயமாக இவ்வாலயம் விளங்குகின்றது.

**பெயரின் பின்புலம்**

சோழ நாட்டு இளவரசி மாருதப்புரவீகவல்லியின் குதிரைமுகம் என்னும் நோய் நீங்கப்பட்ட இடம் மாவிட்டபுரம். இதற்கு மாவை என்று மறுபெயரும் உண்டு. அந்த மாவை என்பதனை அடியொட்டி இவ்வாலயத்துக்கு மாவை சித்தி விநாயகர் அம்பாள் ஆலயம் என்று பெயரிடப்பட்டது.

இந்த ஆலயத்தின் தோற்றத்துக்கும் இதன் பெயருக்கும் பின்னணியில் இருவேறு செவிவழிக்கதைகள் காணப்படுகின்றது. கார்த்தி என்ற நெல்வியாபாரியின் கனவில் பிள்ளையார் தோன்றி கிணற்றில் ஒரு கல் இருப்பதாகவும் அதை எடுத்து என்னை பூஜிப்பாய் என்று திருவாய் மலர்ந்து அருளினார். அவரே ஒரு கொட்டகை அமைத்து வழிபட்டதாகவும், அதே போல் சின்னத்தம்பி மாணிக்கம் என்பவர் அம்மன் படம் ஒன்றினை பட அறையில் வைத்து வழிபடப்பட்டதாகவும் பிற்பட்ட காலத்தில் ஒரு மாமரத்தின் கீழ் அந்த படத்தினை வைத்து குறி சொல்லி கலை ஆடும் வழக்கம் காணப்பட்டதாகவும் இந்தக் கதைகள் அமைகின்றன.

**தோற்றமும் சீரமைப்பும்**

1969ஆம் ஆண்டில் பிள்ளையார் ஆலயத்தில் சீனிவாசக் குருக்கள், பாஸ்கரசர்மா என்ற இரு குருக்களின் தலைமையில் கும்பாபிஷேகம் இடம் பெற்றது. அதேபோல் 1984ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் அம்மன் ஆலயத்தில் நீர்வேலி கந்தசாமி கோயில் குருக்களின் தலைமையில் கும்பாபிஷேகம் இடம்பெற்றது. இதன்போது பறை வாத்தியம் இசைக்கப்பட்டது. இரண்டு தனிநபரினால் வழிபடப்பட்டு வந்த வழிபாட்டு முறை பிற்பட்ட காலத்தில் பெரும் செல்வாக்கு பெற்று மிளிரத் தொடங்கியது. தனி நிர்வாக முகாமைத்துவத்துக்குள் இருந்த இரண்டு ஆலயங்கள் 1984ஆம் ஆண்டு மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றத்தின் ஊடாக இரண்டு நிர்வாகக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு இரண்டும் தனிநபரிடம் இருந்து பொது நிர்வாகமாக்கப்பட்டது.

1989ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தால் ஆலயம் கைவிடப்பட்டு யுத்த காலத்தின் பின் மீள் குடியேற்றத்தை தொடர்ந்து 2013ஆம் ஆண்டு வாசிகசாலை மீண்டும் புனரமைக்கப்பட்டு அதனூடாக இரண்டு ஆலயத்துக்கான பொதுவான திருப்பணிச் சபை அமைக்கப்பட்டு 11 மாதங்களுக்குள் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பிற்பாடு 12 நாள்கள் மண்டலாபிஷேகத்தினைத் தொடர்ந்து சங்காபிஷேகம் நிறைவுற்ற மறுநாள் இரண்டு ஆலயங்களுக்குமான பரிபாலன சபை ஒரே நிர்வாக கட்டமைப்பின் கீழ் உருவாக்கபட்டு அதனூடாக பூஜைகள் நடைபெறுகின்றன. தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் இடம்பெற்ற கட்டுமானப் பணிகளின் அடிப்படையில் 2023ஆம் ஆண்டு ஆலயத்தின் சகலவேலைகளும் முழுமையை அடைந்தன. மேலும் யுத்தகாலப் பகுதியில் இரண்டு ஆலயங்களிலும் வெண்கல விக்கிரகமே காணப்பட்டது. யுத்தம் நிறைவு பெற்ற காலப்பகுதியில் பழைய விக்கிரகம் களவாடப்பட்டதால் கும்பாபிஷேகத்தின்போது புதிய கருங்கல் விக்கிரகம் வைக்கப்பட்டது.





இதனடிப்படையில் இவ்வாலயத்தில் கிழக்கு நோக்கி பிள்ளையார் சிலையும், வடக்கு நோக்கி அம்மன் சிலையும், தெற்கு நோக்கி வசந்த மண்டபமும் அமையப்பெற்றுள்ளது. இங்கு நடைபெறும் பூஜைகள் தைப்பொங்கல், மகாசிவராத்திரி, விநாயகர் சதுர்த்தி, பங்குனித்திங்கள், வருடப்பிறப்பு, சித்திராபௌர்ணமி, வைகாசி விசாகம், ஆடிப்பூரம், வரலட்சுமி, நவராத்திரி, தீபாவளி, திருக்கார்த்திகை, விளக்கீடு, திருவெம்பாவை என்பனவாகும்.

தற்கால விஞ்ஞான உலகத்திலே கோவில்கள் எல்லாம் பெரிய அளவிலே விஸ்தரிக்கப்பட்டு வந்தாலும் அங்கு பக்தர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது. அதிலும் குறிப்பாக கோயில்களுக்கு இளைஞர்கள் செல்வதென்பது இன்று இல்லாத ஒரு விடயமாகவே மாறிவிட்டது.

இந்துக்களுடைய புனித நாளாகிய வெள்ளிக்கிழமையிலாவது எதிர்காலத் தலைமுறையினரை ஆலயங்களை நோக்கி அழைத்துச் செல்வதற்குத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'


# மரண அறிவித்தல்



தோற்றம்:30.05.1960 மறைவு:07.02.2023

## செல்லத்துரை கேதீஸ்வரன்

அச்சுவேலி தெற்கு விக்கினேஸ்வரா வீதியை பிறப்பிடமாகவும், கருங்காலி மற்றும் மீனாட்சி அம்மன் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை கேதீஸ்வரன் அவர்கள் நேற்று (07.02.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மாதர் செல்லத்துரை - இராசேஸ்வரி தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும், தில்லையர் - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் பாசமிகு கணவரும், தினேஸ் (கனடா), நிரோஜி, சங்கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேமேஸ்வரி (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் (வவா), ஜீவாகரன் (லண்டன்), ஞானாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுபாஸ்கரன் (சுவிஸ்), யாழினி (லண்டன்), கஸ்தூரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெனனி, சதினா ஆகியோரின் அன்பு மாமனாரும், சாருஜன், விஸ்ணுஜன், சஜித்கா, சஜீதன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (08.02.2023) புதன் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்


மீனாட்சி அம்மன் கோயிலடி,
ஆஸ்பத்திரி வீதி,
அச்சுவேலி.

ஜீவா - 076 606 8689
ஞானம் - 077 654 6763
நிரோஜி - 077 506 4299
தினேஸ் - 0016472736625

(CR 392151-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒருங்கிணைந்த வடகிழக்கு மாகாணசபையின் தலைமைச் செயலாளராக செயலாற்றியவரும் ஒப்பற்ற ஆளுமையாளருமான சிவகுருநாதன் ரங்கராஜாவின் பிறந்ததினம் கடந்த 2ஆம் திகதியாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**



# ஒப்பற்ற நிர்வாகியான சிவகுருநாதன் ரங்கராஜா

**கவிஞர் அழ.பகீரதன்**

தமிழ், தமிழ்த் தேசியம், தமிழர் நலம் என்று சிந்திக்கும்போது எமக்கு உடனே மனதில் தெரிவது அரசியல்வாதிகளே. ஆனால் தமிழ் நிலத்தின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் தங்களை அர்ப்பணித்து உழைத்தவர்களின் பிம்பங்கள் எங்களது மனங்களில் தோன்றா. தன் அறிவு, ஆற்றல் ஆளுமையை தமிழ் நிலத்தின் வளர்ச்சிக்கு அற்பணித்து உழைத்த பண்பாளர்தான் சிவகுருநாதன் ரங்கராஜா. ஒருங்கிணைந்த வடகிழக்கு மாகாண சபையின் தலைமைச் செயலாளராக செயலாற்றிய செயல்வீரரான இவர், நிர்வாகச் சிக்கல், இன முரண்பாடுகள், பிரதேசவாதம், மதவாதம் எனும் பிரச்சினைகள் எதுவுமே தலை தூக்காதவாறு மிகவும் சாதுரியமாக கடமையைக் கையாண்டவர். அந்தச் சபையின் கடைசி தலைமைச் செயலாளராகவும் வடமாகாணத்தின் முதலாவது தலைமைச் செயலாளராகவும் இருந்து இவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. விதந்து போற்றுதற்குரியன.

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். இவரது பிறந்து வளர்ந்த பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயச் சூழல் இவரது பண்புவிருத்தியை உருவாக்கியது. அறிவுவிருத்தியை பொன்னாலை வித்தியாலயம் ஏற்படுத்தி புலமைப்பரிசில் பெற்று யாழ். ஸ்ரான்லிக் கல்லூரியில் சாதாரணதரம் வரையில் கற்று, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் உயர்கல்விபெற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்று பட்டதாரியானார். நிதிமுகாமைத்துவம் போன்ற விடயங்களில் சுயகற்றலின் மூலம் தனது கல்வியை விரிவுபடுத்தினார்.

1970 ஏப்ரல் 16ஆம் திகதி எழுதுவினைஞராக அரச சேவையில் இணைந்தார். 1977இல் இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்து கிழக்கு மாகாணத்தில் அட்டாளைச் சேனை, சம்மாந்துறை ஆகிய இடங்களில் உதவி மாவட்டச் செயலராகக் கடமையாற்றினார். அம்பாறை மாவட்ட செயலகத்தில் தலைமைக் காரியாலய உதவி மாவட்டச் செயலராகவும் மன்னார், வவுனியா மாவட்டங்களில் உதவித் திட்டப் பணிப்பாளராகவும் மன்னார் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்திப் பிரதித் திட்டப் பணிப்பாளராகவும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

1992ஆம் ஆண்டில் வட கிழக்கு மாகாண சபையின் உருவாக்கத்தின்போது மாகாண சபையின் திட்டமிடற் பிரதிச் செயலாளராகவும், பின்னர் திட்டமிடல் பிரதி பிரதம செயலாளராகவும், ஆளுநரின் செயலாளராகவும், 2002-2006ஆம் ஆண்டுவரை வடகிழக்கு மாகாணசபையின் தலைமைச் செயலாளராகவும் 2007இலிருந்து வடமாகாண சபையின் தலைமைச் செயலாளராவும் கடமையாற்றினார்.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் வீறுபெற்று நடந்த காலத்தில் பல சோதனைகளையும் வேதனையகளையும் எதிர்கொண்டே தமது பணியினைச் சிறப்பான முறையில் ரங்கராஜா மேற்கொண்டார். மக்கள் நலச் சிந்தனையும் ஆன்மிக ஆற்றலும் ஒருசேரப் பெற்று தனது பணிணை மேற்கொண்டமையை அவரோடு உடன் பணியாற்றியவர்களும் கல்விமான்களும் புகழ்ந்துரைப்பர். சைவ நெறியின் பால் ஆழ்ந்த ஈடுபாடுடையவர். ஆயினும் சகல சமயங்கள், மார்க்கங்கள் தொடர்பான தெளிவு மிக்கவராக நுணுக்கமான ஆன்மிக ஞானம் வாய்ந்தவராக எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் தனது கடமையைச் செவ்வனே செய்தார்.

இயற்கை இடர்களான 1978ஆம் ஆண்டில் ஏற்பட்ட புயல் அழிவுகளையும், 2004ஆம் ஆண்டில் வட கிழக்கில் கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட சுனாமி அழிவுகளையும் மற்றும் காலத்துக்குக் காலம் வெள்ளபெருக்கு, வரட்சியால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களில் துயர் துடைப்பதிலும் புதுவாழ்வு கொடுப்பதிலும் மீள மக்கள் எழுச்சிபெறுவதிலும் பெரும் பணியாற்றியவர்.

உள்நாட்டு போர்க் காலத்தில் இடம்பெயர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்களின் நலம் பேணுவதிலும் மீள் குடியேற்றங்கள் செய்வதிலும் பாதிக்கப்பட்ட மக்களின் உணவு, பாதுகாப்பு, அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் நிலைபேறான வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதிலும் நீண்டகாலமாக செயற்பட்ட கர்ம வீரர் ரங்கராஜா எனலாம். நான்கு தசாப்தங்கள் இலங்கை நிர்வாக சேவையில் உயரிய சேவையினை நல்கி, பேரம்பேசலில் சிறந்த அதிகாரியாகவும் திகழ்ந்தவர். வடக்கு கிழக்கில் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான் சர்வதேச உதவித் திட்டம், குவைத் நிதி மற்றும் பல்வேறு நாடுகளின் உதவிகளுடன் பல நடுத்தர பெரிய திட்டங்கள் முன்னெடுப்பதில் பேரம்பேசி, அமுல்படுத்தி கண்காணிப்பதில் செயற்பட்டவர்.

பல சிறிய, நுண் திட்டங்களை முன்னெடுத்து மக்களின் வாழ்வு மேம்பட பாடுபட்டவர். மக்கள் சார் மேம்பாட்டில் மாத்திரம் அன்றி யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினராக இருந்து பல்கலைக்கழக நிர்வாகம் சீராக இயங்குவதற்கும் தன் பங்களிப்பை வழங்கினார். வலி. மேற்கு பிரதேச சபை கட்டிட அமைப்பை உருவாக்குவதற்கான நிதி ஒதுக்கீட்டில் இவரது பங்காற்றுகை குறிப்பிடத்தக்கது.

ஜனநாயகத்தின் கூறுகளாக பிரதிநிதித்துவ ஜனநாயகம், பங்கேற்பு ஜனநாயகம் என்பன அமையும் என்பர். சிறந்த ஜனநாயக செயற்பாடு என்பது தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படுகின்ற பிரதிநிதிகளோடு மட்டுப் படாமல் நிர்வாக அதிகாரிகள் பங்கேற்பு ஜனநாயகத்தினை செயற்படுத்துபவர்களாக இருக்க வேண்டும். அவ்வகையில் ரங்கராஜா சிறந்த முன்னுதாரணம் மிக்கவர். அவரை பின்பற்றி நிர்வாக அதிகாரிகள் மக்கள் நலனை முன்னுதாரணமாக கொண்டு கடமையாற்ற வேண்டும்.

அன்னாரின் நினைவாக பொன்னாலையில் நினைவாலயம் நிறுவ வேண்டும் என்பது பொதுமக்கள் பலரின் எண்ணமாகும். அத்தகு நினைவாலயமானது நூலகமும் ஒன்றுகூடல் மண்டபமும் பூங்காவும் இணைந்ததாக பொன்னாலை மூளாய் மக்களுக்கு பயன்தரு நினைவாலயமாக அமையவேண்டும்.

# ஸ்ரீசங்கருக்கு நினைவஞ்சலி



இலங்கையில் தமிழ் மேடைநாடகம், திரைப்படத்துறையில் முன்னோடியாக விளங்கிய கலைவேந்தன் ஸ்ரீசங்கரின் 43ஆவது ஆண்டு நினைவுதினம் கொழும்பில் எதிர்வரும் 12ஆம் திகதி கடைப்பிடிக்கப் படவுள்ளது.

யாழ். பருத்தித்துறையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கொழும்பில் மேடை நாடகத்துறையில் ஆற்றிய பணிகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை. ஈழத்து நாடகத்துறையின் பிதாமகன் எனக் கருதப்படும் கலையரசு சொர்ணலிங்கம் இவரது நாடகப்பணியை பாராட்டி கலைவேந்தன் எனப் பட்டமளித்து கௌரவித்துள்ளார். ஸ்ரீசங்கர் திரைப்படத்துறையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனுடன் ராஜராஜசோழன் திரைப்படத்தில் நடித்த இலங்கைக் கலைஞர் என்ற பெருமைக்குரியவர். இவரது நினைவுதினத்தை அவரது சிஷ்யன் சண்முகராஜா கடந்த 42 ஆண்டுகளாகக் கடைப்பிடித்து வருகின்றார். இவர், 'ஸ்ரீசங்கர் நற்பணி மன்றம்' என்ற அமைப்பை உருவாக்கி 2006ஆம் ஆண்டு கொழும்பில் இவருக்குச் சிலையொன்றை நிறுவியுள்ளார். இந்த நினைவுதினம் இம்முறை, கொழும்பு பழைய நகரசபை மண்டபத்தில் கொழும்பு மாநகர பிரதி மேயர் எம்.ஐ.எம்.இக்பால் தலைமையில் நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைகளுக்கான இடங்கள் வழங்கல்

18.02.2023 - 19.02.2023 ஆம் திகதியில் மாதகல் துறைமுகப் பகுதியில் அமைந்துள்ள புனித லூர்து அன்னை திருத்தல திருவிழாவின் போது வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் குளிர் பானக் கடைகள், உணவகங்கள், அழகுசாதனக் கடைகள், ஏனைய பல்வேறு கடைகளுக்குமான இடங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

கடைகளுக்கான இடங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 12.02.2023 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு புனித லூர்து அன்னை திருத்தலத்திற்கு சமூகம் தந்து தங்களின் கடைக் கான இடத்தினை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**அருட்பணி S. றோய் பேடினன்,**
**புனித தோமையார் ஆலயம்,**
**மாதகல்.**

(CS/48867)4.6

## அரியாலை சனசமூக நிலையம்
## கேள்வி கோரல்கள்

அரியாலை சனசமூக நிலையத்தின் மூன்றுமாடி கட்டடத்தின் B பகுதியினை நிர்மாணிப்பதற்கான Labour Contract மற்றும் மூலப் பொருட்களுக்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

அரியாலை சனசமூக நிலையத்தில் படிவங்களைப் பெற்று 25.02.2023 இற்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு :**
**077 711 0972,**
**077 319 9522**

**185, புங்கன்குளம் வீதி, அரியாலை.**

(CS 23350)(3/6)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த (09.01.2023) திங்கட்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் குழந்தையன் முத்தன்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (08.02.2023) புதன் கிழமை காலை 5.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆற்றில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத்தொடர்ந்து சபிண்டீகரணக்கிரியையும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மூன்றாம் சந்தி, கெருடாவில் தெற்கு,**
**தொண்டைமானாறு.**

**குடும்பத்தினர்**

(cs.23337) (2.6)

## பெயர் மாற்றம்

குடமியன், வரணியில் வசிக்கும் **தம்பு சரஸ்வதிப் பிள்ளை** (தற்போது செல்வராசா சரஸ்வதி) ஆகிய எனது பெயரினை இன்று முதல் **தம்பு சரஸ்வதி** என மாற்றிக்கொள்வதுடன் இன்று முதல் சகல ஆவணங் களிலும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(CS 698)(3/6)

**தம்பு சரஸ்வதி**

## பெயர் மாற்றம்

163ம் கட்டை, சோலைநகர், உமையாள்புரத்தில் வதியும் **இராசரத்தினம் தேவேந்திரராசா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **இராசரத்தினம் தெய்வேந்திரராசா** என மாற்றம் செய்வதோடு இனி வரும் சகல ஆவணங் களிலும் **இராசரத்தினம் தெய்வேந்திரராசா** என்றே கையொப்பமிட்டுப் பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப் படுத்துகின்றேன்.

**இராசரத்தினம் தெய்வேந்திரராசா**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செந்தூரன் மிதுலா தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

### கவினாஷ்

யாழ்/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவரை வாழ்த்துவதோடு மென்மேலும் வெற்றிகள் பெற நல்லாசிகளை வழங்குகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**பெரியப்பா, பெரியம்மா,**
**அபி அக்கா,**
**ஆதி அண்ணா.**

(CS/49003)4.6)

## Vacancy
### Northern Central Hospital (Private) Limited

Northern Central Hospital is one of the largest medical institutions in Jaffna providing quality patient care for the needy people in the Northern Srilanka.

We are looking for skilled and energetic candidates for an Assistant Accountant position.

- A Minimum of 3 years experience in Accounting/ Audit is mandatory.
- Partly qualified in ICASL/ACCA/CIMA or fully qualified in AAT.
- A degree in finance.
- Knowledge in Tally ERP system.
- Good command in English

A competitive remuneration package and other benefits will be offered as per the industry standards.

If you are really interested and ready to join immediately, please send your CV with covering letter on or before 15th February 2023, by e-mail or post. CV received without covering letter will not be considered.

**HR Department**
**Northern Central Hospitals (Private) Limited**
**No: 342,Palaly Road, Jaffna.**
**Contact Number- 0771729988 / 021 7217324**
**E-mail : northernhrm@gmail.com**

(CR 39214 - B)(3/6)

## Vacancy

A leading Private Hospital in Jaffna District is looking for competent, dynamic and experienced person to serve as Human Resources Manager at Northern central Hospitals

**Qualifications:-**

- A Degree from a recognized University Preferably in the field of Human Resources Management with 5 years' experience in similar capacity.
  OR
  Master Degree in Business Administration, Equivalent or Professional Qualifications with 5 years' experience. in similar capacity.
  OR
  Administrative Services together with University Degree and 10 years' experience in senior Management Services.
- The experience should be in the area of statutory law and regulations such as Labour regulations. ( WBO, EPF & ETF Act etc.)
- Fluent in all three Languages
- Strong communication and interpersonal skills along with impressive public relation and negotiation skills.

**Responsibilities:-**

- Responsible for total HR management of the hospital covering all functions related to HR management.
- Provide effective leadership in HR practice.
- Responsible for scheduling directing and delighting daily task to the HR team in order to provide required information to the management for decision making process.

Attractive remuneration packages await the right candidate.
If this description fits your profiles send your CV with the covering letter on or before 15th February 2023 through e-mail or post.

**Managing Director**
**Northern Central Hospitals (Private) Limited**
**No- 342, Palaly Road, Jaffna,**
**Contact No - 0777318740 & 0217217324**
**E-mail : northernhrm@gmail.com**

(CR 39214 - A)(3/6)


## கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, பெப். 8

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கஞ்சாவுடன் ஒருவர் நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி சிறப்பு அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வட்டக்கச்சி ஆறுமுகன் வீதியில் கஞ்சா பொதியுடன் பயணித்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 7 கிலோ 800 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டது. சந்தேகநபர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(எ-14.113)

## கடலட்டை பிடித்த மூவர் கைது

மன்னார், பெப். 8

மன்னார் கற்பிட்டி கடற்பரப்பில் சட்ட விரோதமான முறையில் கடலட்டை பிடித்த மூவர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து சுமார் 671 கடலட்டை பறிமுதல் செய்யப்பட்டதுடன் கடலட்டை பிடிப்பதற்கு பயன்படுத்திய 17 சங்கு குண்டுகள், படகுகள் ஆகியவையும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் அதேபகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(சு- 213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் மறுசீரமைப்புத் தொடர்பில்

# ஜின் பிங்குடன் விரைவில் உரையாடவுள்ளார் ரணில்

கொழும்பு, பெப். 8

இலங்கையின் கடன்மறுசீரமைப்புத் தொடர்பில் சீன ஜனாதிபதி ஜின் பிங்குடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரைவில் உரையாடவுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் என்பனவே இலங்கைக்கு இருதரப்பு கடன் வழங்கியுள்ள நாடுகளாகும். இந்த நிலையில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2.9 பில்லியன் டொலர் கடன் திட்டத்தைப் பெற்றுக்கொள்ள மேற்படி நாடுகளின் உத்தரவாதங்கள் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்துள்ளன.

இந்தியாவும் ஏற்கனவே 10 வருட கால கடன் இரத்து மற்றும் 15 வருட மறுசீரமைப்புக்கு உடன்பட்டுள்ளது. இதனை சர்வதேச நாணய நிதியமும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஜப்பானும் இதேபோன்ற இணக்கத்துக்கு வரும் என எதிர் பார்க்கப்படுகிறது. எனினும், சீனா 2 வருடகால கடன் இரத்தை மாத்திரம் அறிவித்துள்ளது. இது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு போதாது என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்தே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீன ஜனாதிபதியுடன் தொலைபேசி கலந்துரையாடல் ஒன்றுக்கு தயாராவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-இ)

# வெள்ளத்தால் அறுவடை பாதிப்பு நெற்செய்கையாளர்கள் கவலை!

*சாவகச்சேரி, பெப். 8*

அண்மையில் பெய்த மழையால் வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் நெல் அறுவடை செய்ய முடியாதுள்ளது என நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அறுகுவெளி, தனங்களப்பு, மறவன்புலவு, கைதடி, கோயிலாக் கண்டி, நாவற்குழி ஆகிய பிரதேசங்களில் உள்ள வயல்கள் அறுவடை செய்யும் காலத்தில் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகிறது. திடீரென பெய்த மழை காரணமாக பல்வேறு நெருக்கடிகளுக்குள் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் நெற்பயிர்கள் அழிந்தால் எதிர்வரும் காலங்களில் அரிசி விலையேற்றத்தை தடுக்க முடியாது என்றும் மக்கள் பட்டினியை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும் என்றும் இதுதொடர்பாக உரிய திணைக்களங்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு அறிவித்தும் வெள்ளத்தை அகற்றுவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் செம்மணிப் பாலத்தின் துருசு திறக்கப்பட்டு வெள்ளம் வடிந்தோடினால் நெற்கதிர்களைப் பாதுகாப்பாக அறுவடை செய்யமுடியும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என நெற்செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். *(எ-14,159)*


## கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ச.பாலகுமார் அவர்களின் அன்புத் தாயார்

**சண்முகநாதன் இராஜேஸ்வரி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 03.04.1951 மறைவு 07.02.2023

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக்கூட்டுறவுச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

**வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்**

மலர்வு 17-05-1944 உதிர்வு 06.02.2023



விழிகள் இமைக்க மறந்திட்ட
நொடிகளில் கூட
சிந்தித்த வேளை யெல்லாம்
சிந்தனையில் உந்தன் நிழல்
தொலைவாகிப் போனாலும்
தொலைந்து போகாத உன்
நினைவலைகளை மீட்டிட
நினைக்க வலிக்கிறது நெஞ்சம்
விழிநீர் சொரிந்திட
விம்மித் தவிக்கிறது மனம்
அழுது விம்முகின்ற நாம்
மெழுகுபோல் உருகுகின்றோம்
பரிவு கொண்ட எமைவிட்டு
பிரிந்து சென்றதேனோ.

பிரிவால் துயருறும்

**New Global Business Systems**

நிர்வாகமும் ஊழியர்களும்,
குமரகோட்டம் கோண்டாவில். 021 222 7262

## பொன்.சுகந்தனின் சிறப்பு சொற்பொழிவு

வரலாற்று பிரசித்திபெற்ற மாத்தளை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. பெருந்திருவிழாவை முன்னிட்டு நிகழ்த்தப்படவுள்ள சொற்பொழிவு நிகழ்வில் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் இரு தினங்கள் பொன்.சுகந்தன் சொற்பொழிவாற்றவுள்ளார். (ச)

## 31ஆம் நாள் வீட்டுக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 11.01.2023 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

**ஞானேஸ்வரி இராசரத்தினம்**

அவர்களின் வீட்டுக்கிரியைகள் நாளை (09.02.2023) வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசியூடாகவும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

140/30, 2ஆம் ஒழுங்கை,
அம்பத்தன்னை காடன், பண்டாரவளை. (CS/23324)(4.6)

குடும்பத்தினர்.

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் சுபகிருது வருஷம் தைத்திங்கள் 14 ஆம் நாள் (28.01. 2023) சனிக்கிழமை பூர்வ பட்ஷ அட்டமி திதியில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் திருமதி

**மங்களேஸ்வரி அம்மா லோகேஸ்வரக்குருக்கள்**

அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

- 06.02.2023 - திங்கட்கிழமை - தசாகம் (காலை 8.30 மணி)
- 07.02.2023 - செவ்வாய்க்கிழமை - ஏகோதிட்டம், மாசியம் (முற்பகல் 10.00 மணி)
- 08.02.2023 - புதன்கிழமை - சபிண்டீகரணம் (முற்பகல் 10.00 மணி)
- 09.02.2023 - வியாழக்கிழமை கிருகயக்ஞம் (மதியபோசனம்) நண்பகல் 12 மணி)

மேற்படி கிரியைகளில் தாங்களும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மாசாந்தி அடைய பிரார்த்திப்பதுடன் நாளை (09.02.2023) வியாழக்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

நுணுவில் பிள்ளையார் கோவில் வீதி,
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (cs 48993) (2.6)

ந.லோகேஸ்வரக்குருக்கள்
குடும்பத்தினர்.
077 968 3044

## கண்ணீர் அஞ்சலி



யா/யூனியன் கல்லூரி 96 A/L பழைய மாணவன் திரு.அன்புராஜ் அமிர்தலிங்கம் அவர்களின் பாசமிகு தந்தையார்

**திரு.வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்**

அவர்கள் 06.02.2023 ( திங்கட்கிழமை) அன்று இறைபதம் அடைந்த செய்தி அறிந்து நாங்கள் மிகவும் வேதனை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவுத் துயர் பகிரும்
யா/யூனியன் கல்லூரி நண்பர்கள் குழு
( 96 உயர்தரம்)

(CS 23403) (1-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 06, பிரதானவீதி, ஆதன இலக்கம் 408 எமது ஆதனவரிப்பதிவேட்டில் நிக்கலஸ் திசவீரசிங்கவும் சொந்தக்காரர்களும் என்ற பெயரில் காணப்படுகிறது.

குறித்த எலிசபத் தங்கரட்ணம் திசவீரசிங்க அவர்களால் பிரசித்த நொத்தாரிசு க.தம்பையா முகதாவில் 11.09.1935 ம் திகதியிட்டு 614 ம் இலக்க அறுதி உறுதி மூலம் டொக்டர் ஜோர்ஜ் ரட்ணராஜாவுக்கு கைமாற்றியுள்ளார்கள்.

குறித்த ஜோர்ஜ் மகேந்திரா திசவீரசிங்க, பிரான்சிஸ் அருணதிசவீரசிங்க, கிறிஸ்தோபர் நிரஞ்சன் திசவீரசிங்க பிரசித்த நொத்தாரிசு N.P.K அத்தநாயக்க முகதாவில் 08.02.2005 ம் திகதியிட்டு 714 ம் நன்கொடை உறுதி மூலம் நிலப்பரப்பு 20 1/8 மயில்வாகனம் சண்முகரத்தினத்துக்கு கைமாற்றியுள்ளார்கள். குறித்த ஆதனத்தை ஜோர்ஜ் மகேந்திரா திசவீரசிங்க, பிரான்சிஸ் அருணதிசவீரசிங்க, கிறிஸ்தோபர் நிரஞ்சன் திசவீரசிங்க, மயில்வாகனம் சண்முகரத்தினம் பிரசித்த நொத்தாரிசு சுகந்தி இராஜகுலேந்திரா முகதாவில் 06.05.2019 ம் திகதியிட்டு 2577 ம் இலக்க அறுதி உறுதி மூலம் சிவசுப்பிரமணியம் இராஜேந்திரனுக்கு கைமாற்றியுள்ளார்.

**ஆதன இடாப்பு**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவு யாழ்ப்பாண மாநகரசபை, J/75, சுண்டிக்குளி தெற்கு கிராமசேவகர் பிரிவு, வரி மதிப்பீட்டு இல 408, பிரதான வீதி, யாழ்ப்பாணம் "காரைதோட்டம்" இது நிலஅளவையாளர் K.நவரட்ணம் அவர்களால் 2014 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 02 ம் திகதி 1367 ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி துண்டு 1 இதன் விசாலம் நிலப்பரப்பு பத்து குளி பூச்சியம் பூச்சியம் தசம் ஒன்று இரண்டு (நிலப்பரப்பு 10 குளி 00.12) இது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே.ஏ. இளையதம்பி அவர்களால் 12.10.2018 திகதியிடப்பட்டு 1357 ம் இலக்கத்தில் வித்தாரிக்கப்பட்ட நிலஅளவைப்படத்தில் துண்டு 1 என சுட்டப்பட்டுள்ளது.

இதற்கு எல்லைகள்

கிழக்கு :- வடிகால்

வடக்கு :- பிரதான வீதி

மேற்கு : - சுரேஷின் ஆதனமும் அணுகு வழியும்

தெற்கு :- சாந்தரூபன் ஜெரால்டீன் ஜீன் சுகந்திரா, சைமகன் மோகன், இராஜேஸ்வரி இராசநாயகம் ஆகியோரின் ஆதனம் இதற்குட்பட்ட நிலம் மற்றும் இதடாங்கலும் இதைச்சேர்ந்தவைகளும்

தற்போது சிவசுப்பிரமணியம் இராஜேந்திரன் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/ முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப் படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சிவசுப்பிரமணியம் இராஜேந்திரன் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 - 11 - 1941 | மறைவு 07 - 02 - 2023

### திருமதி புஸ்பலீலா குமாரசாமி (அன்னாள்)

சரசாலையைப் பிறப்பிடமாகவும், இல. 147, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பலீலா குமாரசாமி நேற்று (07.02.2023) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், அன்னம்மா, காலஞ்சென்ற இராசரத்தினம், துரைராசா, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நந்தினி, நந்தகுமாரன், ரஞ்சினி, வதனி, சிவனேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், அருள்நாயகம், செல்வராணி, பரமேஸ்வரன், ஜெயந்தன், தர்மலதா ஆகியோரின் அன்பு மாமியாரும், சாள்ஸ் அன்ரனி, டொனி, ஜான்சன், டெல்சன், மெல்கியா, மெல்கீன், கெமரீன், சாள்ஸ் ஜக்சன், கெரேனா, கெர்சியா, சாரோன், எமி, ஆரோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (08.02.2023) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இல.147, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக எக்காளத்தொனி பூரண சுவிஷேச சபை சேமக்காலை (நுணாவில்) இற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.147,**
**கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/23349)4,6

ஓம் விராட் விஸ்வப் ப்ரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 - 12 - 1954 | மறைவு 03 - 02 - 2023

### திருமதி அன்னலட்சுமி சோமசுந்தரம்

நாவற்காடு, வரணியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சோமசுந்தரம் அவர்கள் கடந்த (03.02.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் (பேப்பர் சோமு) அவர்களின் துணைவியாரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சிவபாக்கியம் தம்பதி களின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இலட்சுமியம்மா தம்பதிகளின் மருமகளும், மனோகரி, ரவிக்குமார் (கண்ணன்- டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரன், சுபாங்கினி ஆகியோரின் அன்பு மாமியாரும், தேஜஸ்வி, ஸ்வரா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், காலஞ்சென்ற கிருஷ்ணப்பிள்ளை மற்றும் சிவராசா, ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், லதாம்பிகை, தங்கம்மா, சண்முகநாதன், தங்கரட்ணம், பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2023) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியை களுக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சண்டிலிப்பாய்.**
**077 605 9973, 077 998 1761**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS 23347) (3/6)

## மரண அறிவித்தல்



மலர்வு 26 - 01 - 1950 | உதிர்வு 05 - 02 - 2023

### திருமதி சிறிதவம் சண்முகநாதன் (பேக்கரி அக்கா)

சரவணையைப் பிறப்பிடமாகவும் யோகபுரம் மத்தி மல்லாவியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிறிதவம் சண்முகநாதன் (பேக்கரி அக்கா) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகநாதன் (பேக்கரி) என்பவரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அருணாசலம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், கேதீஸ்வரன், மேகனாநாதன், காலஞ்சென்ற ஜெகநாதன் (அப்பு), திருமாவளவன், காந்தரூபி, காலஞ்சென்ற வசுமதி ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ் சென்றவர்களான இலிங்கப்பிள்ளை, விசாலாட்சி, கண்மணிப்பிள்ளை ஆகியோரின் அருமை மைத்துனியும், பிரபாகரன், ஞானகரன், பாஸ்கரி (ரதி), சசிகரன், சுபாஸ்கரி (கவிதா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலினி, தர்சினி, சிறிகுமார், தீபா, குகன் யோகராஜா ஆகியோரின் அருமை மாமியாரும், பிரபாலினி, சங்கீர்த்தன், சசிவர்மன், அகரன், அதியன், பாவலன், தர்மிகா, தரணிகா, புகழினியன், அகழினி, சோபனா, லக்ஷிகன், சுவேதா, நித்திலன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2023) வியாழக்கிழமை அனிஞ்சியன் குளம் பொது இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிரபாகரன் (மகன் - இலங்கை) : 077 986 3734**
**ஞானகரன் (மகன் - நோர்வே) : 004 792 552 222**
**பாஸ்கரி (மகள் - இலங்கை) : 077 049 2636**
**சசிகரன் (மகன் - இலங்கை) : 077 529 3137**
**சுபாஸ்கரி (மகள் - நோர்வே) : 004 799 557 478**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CR 39213) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15 . 05 . 1937

மறைவு
21 . 01 . 2022

### அமரர் பொன்னுச்சாமி இராசம்மா

(சாவகச்சேரி, முழங்காவில்)

திதி:- 08.02.2023

தாயே... எம்மை பிரிந்தாயே
ஓராண்டு கடந்தாலும்,
என்றும் நம் நெஞ்சகத்தில்
அமர்ந்தாயே.

தயவான தாயாய்
தரணியில் பிறந்தாய்...
கல்வியில் சிறந்தாய்...
பல தொழில் புரிந்தாய்...
விரும்பியவரை மணந்தாய்
எம் கருவை சுமந்தாய்...
நற்பண்புடன் வளர்த்தாய்...

நல்லுறுதி கொடுத்தாய்...
நம் வளர்ச்சியில் மகிழ்ந்தாய்...
இறுதியாக சிரித்தாய்...
உன் நிலை மறந்தாய்...
எம்மை விட்டு பிரிந்தாய்...
ஆண்டவனடியில்
அமைதியடைந்தாய்...
எம்மை நாமே தேற்றுகிறோம்
தாயே. நினைவுகள் காலத்தால்
மறைவதில்லை.

முழங்காவில்,
கிளிநொச்சி.

பொன்ராசு குடும்பத்தின்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(CS/ 232039.6)

---

**PEOPLE'S BANK**

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.09.2021 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் 25.02.2023 (சனிக்கிழமை), 26.02.2023 ( ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதியில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ் ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ் பிரதானவீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக் கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ். கன்னாதிட்டி, இணுவில், பருத்தித் துறை, புலோலி, கொடிகாமம்

நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி :- 24.02.2023

ஏலவிற்பனை நடைபெறும் இடம் :- யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை

திகதி :- 25.02.2023 (சனிக்கிழமை)
26.02.2023 (ஞாயிற்றுக்கிழமை)

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.


**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல : 021-222 2601 / 021-222 8602**
**தொலைநகல் : 021-222 2602**
**மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk**

(CR/392034.6)

---

# மரண அறிவித்தல்



தோற்றம்
10.09.1933

மறைவு
06.02.2023

## திருமதி இரத்தினம் பரமேஸ்வரி

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் பரமேஸ்வரி நேற்றுமுன்தினம் (06.02.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சதாசிவம் இரத்தினத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற சதாசிவம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், பரமேஸ்வரன் (ஜேர்மனி), சாந்தமலர் (கனடா), புஸ்பமலர் ஆகியோரின் பாசமிகு தாயாரும், குகதாஸ் (கனடா), காலஞ்சென்ற சங்கரலிங்கம், தேவிமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், சிவதர்ஷனி - கோபாலகிருஸ்ணன் (கொலண்ட்), நிமலதாசன் - பாரதி (கனடா), மாயவன் -கோபிகா (கனடா) சர்மிலன் (கனடா), திவாகரன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவாகரன், சதீஸ், வீஸ்மன், சாதனா, நித்திகா, ருத்ரா, அகரன், யாத்திரன், அதிரா, ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2023) வியாழக்கிழமை நுணாவில் மேற்கு இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று திருவுடல் குச்சப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

077 608 0605

(CR 39208) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைமைகளிடம் ஒற்றுமையே கிடையாது!

## அதனால்தான் தீர்வு பிற்போகின்றது வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

அதிகாரப் பகிர்வு விவகாரத்தில் தெற்கு அரசியல்வாதிகள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு முன்னர் முதலில் தமிழ்த் தலைமைகள் ஒருமித்த இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும். அரசியல் தீர்வு விவகாரத்தில் தமிழ்த் தலைமைகள் மத்தியில் ஒற்றுமை கிடையாது. இதுவே அரசியல் தீர்வு இழுபறிக்குப் பிரதான காரணியாக உள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவே அரசமைப்பின் 13ஆவது திருத்தம் ஊடாக மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் அரசியல் உரிமை மாகாண சபைத் தேர்தல் ஊடாக பாதுகாக்கப்பட்டது. நல்லாட்சி அரசாங்கம் அந்த உரிமையையும் பறித்துக் கொண்டது. மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூறவேண்டும்.

நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ள பின்னணியில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தவிர்த்து ஏனைய அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்கக்கூடாது என மகாசங்கத்தினர் உட்பட பெரும்பாலான தரப்பினர் கடுமையாக வலியுறுத்துகிறார்கள். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்குப் பகிர்ந்தளிக்கும்போது நாட்டில் தேவையில்லாத பிரச்சினைகள் தோற்றம்பெறும். பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு அல்ல எந்த மாகாணங்களுக்கும் பகிர்ந்தளிக்கக் கூடாது.

அதிகாரப்பகிர்வு விவகாரத்தில் தமிழ்த் தலைமைகள் மத்தியில் காணப்படும் கருத்து மற்றும் கொள்கை வேறுபாடுகள் அதிகாரப் பகிர்வு விவகாரம் காலம் காலமாக இழுபறி நிலையில் இருக்க ஏதுவான காரணியாக உள்ளது - என்றார். (அ-ம)

# தேர்தல் சவால் இல்லை கூறுகின்றது பெரமுன!



கொழும்பு, பெப். 8

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் ஏனைய கட்சிகள் எமக்குச் சவால் மிக்கதாக அமையாது. உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பெறுபேறு எவ்வாறு அமையும் என்பதை மார்ச் முதலாம் திகதிக்குப் பின்பே அறிய முடியும்.

இவ்வாறுஸ்ரீலங்காபொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

தேர்தலில் வெற்றியை எதிர்பார்த்தே அனைத்துக் கட்சிகளும் போட்டியிடுகின்றன.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பதுகுறித்துமக்கள் இன்னமும் உறுதியான முடிவை எடுக்க வில்லை. எமது கட்சி முதலிடத்தை பிடிக்கும் என நாம் நம்புகிறோம்.

இதுதொடர்பில் சரியான கணிப்பைமார்ச் முதலாம் திகதிக்கு பிறகு அறியக்கூடியதாக இருக்கும்.

தற்போதைய சூழ்நிலையின்படி50சதவீததொகுதிகளுக்குமேல்மொட்டுகட்சி வெற்றிநடை போடும் என நம்புகின்றோம்.

ஐக்கிய மக்கள் சக்தியோ, தேசிய மக்கள் சக்தியோ, டலஸ் தரப்போ எமக்கு எவ்விதத்திலும் சவாலாக இருக்காது என அவர் மேலும்கூறினார். (ச-44)

### ஜனாதிபதி...

இன்று வெளிநடப்பு செய்வதற்கு எதிர்க் கட்சிகள் முடிவெடுத்துள்ளன.

9ஆவது நாடாளுமன்றத்தின் 4 ஆவது கூட்டத்தொடரை ஜனாதிபதி இன்று முற்பகல் 10 மணிக்கு ஆரம்பித்து வைத்து அக்கிராசனஉரையைநிகழ்த்தவுள்ளார்.

இந்த நிலையில் சுதந்திர மக்கள் கூட்டணியின் நிறைவேற்றுக்குழு நேற்றுக் கூடி கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது. தேசிய சுதந்திர முன்னணி, சுதந்திர மக்கள் சபை, சுதந்திரக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி உட்பட மேற்படி கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஜனாதிபதிக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் இன்று நாடாளுமன்றிலிருந்து வெளிநடப்புச் செய்யத் திட்டமிட்டுள்ளன. (அ-ம-44)

### பிரதேச...

செயலாளர்கள் சங்கத்தின் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சு மட்டத்தில் பேச்சுக்கள் நடைபெற்ற போதிலும், அது வெற்றிகரமானதாக அமையவில்லை என்று இலங்கை பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அரசால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வரித் திருத்தத்துக்கு எதிராகவே இந்தப் போராட்டத்தில் பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவிப் பிரதேச செயலாளர்கள் ஈடுபடவுள்ளனர். (அ-ம-125)

### கறுப்புநாள்...

சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் ஆக்கிரமிப்புக்கள், அடக்குமுறைகளை எதிர்த்தும், சிங்கள இராணுவம் எமது மண்ணிலிருந்து வெளியேறவேண்டும் என்பதை வலியுறுத்தியும், தமிழ்த் தேசிய இனத்தின் பிறப்புரிமையான சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து கடந்த 4ஆம் திகதி பேரணி ஆரம்பமாகி நேற்றுமுன்தினம் மூன்றாம் நாள் அம்பாறையில் முடிவடைந்தது. பேரணி நேற்று அம்பாறை திருக்கோயில் விநாயகபுரம் பகுதியிலிருந்து ஆரம்பமானது.

விநாயகபுரத்தில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்காக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் ஈகச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி விநாயகபுரம் மாணிக்க விநாயகர் ஆலய மதகுருவின் ஆசியுரையுடன் பேரணி ஆரம்பிக்கப்பட்டு, அங்கிருந்து மட்டக்களப்பைச் சென்றடைந்தது. அங்கு ஆர்ப்பாட்டங்கள் கண்டனக்கூட்டங்களுடன், மட்டக்களப்பு பிரகடனம் செய்யப்பட்டு, பேரணி நிறைவடைந்தது. அம்பாறையிலிருந்தும் மக்கள் அலையலையாகப் பேரெழுச்சியுடன் பேரணியில் கலந்து கொண்டனர். (அ-ம-125)

### சாள்ஸின்...

ஏற்றுக்கொண்டார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்தப் பதவிவிலகல் தொடர்பான அறிவிப்பை திருமதி சாள்ஸ் விடுத்திருந்தார். எனினும் ஜனாதிபதி ரணில் இந்தப் பதவி விலகல் தொடர்பில் எந்த உத்தியோகபூர்வமான முடிவையும் நேற்றுமுன்தினம் வரையில் எடுக்கவில்லை. இந்த நிலையிலேயே திருமதி சாள்ஸின் பதவி விலகலை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கையிட்டுள்ளது. (அ-ம)

### இராணுவ...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக கடந்த 4 ஆம் திகதி ஆரம்பித்த பேரணியின் இறுதிநாள் நேற்றாகும். இதைமுன்னிட்டு கிழக்கில் ஆர்ப்பாட்டங்களும் கண்டனக்கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அவற்றில் கலந்து கொள்வதற்காகத் தமிழர் தாயகத்தின் பலபகுதிகளில் இருந்தும் நூற்றுக்கணக்கானவர்கள் சென்றனர். பேரணியில் கலந்துகொண்ட காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான சங்கத்தினர் பயணித்த பேருந்து மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தப் பேருந்து அம்பாறை - தப்பட்டை இராணுவ முகாமுக்கருகே சென்று கொண்டிருந்தபோது, பேருந்தை இலக்கு வைத்து ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கல்லெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் பேருந்தின் கண்ணாடிகள் நொருங்கியுள்ளன. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-125)

### தமிழருக்குத்...

தென்பகுதியிலுள்ள தேரர்கள் அடங்கிய சர்வமதக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டு வடபகுதியில் உள்ள சர்வமதத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். கலந்துரையாடலுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளனர்.

13ஆவது திருத்தம் அப்படியே முற்றுமுழுதாக (காணி, பொலிஸ் அதிகாரங்களுடன்) நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அதற்கு மேலதிகமான அதிகாரங்களும் தமிழர்களுக்குப் பகிரப்பட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று நான்கு பிரதான பௌத்த பீடங்கள் ஜனாதிபதிக்குக் கூட்டாக கடிதம் எழுதியுள்ள நிலையில் யாழ்ப்பாணம் வந்த இந்தத் தேரர் குழு இவ்வாறு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### 13இனை...

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதைவிட, அதனை முற்றுமுழுதாக நீக்கவேண்டும். அதனை இந்தப் பேச்சில் வலியுறுத்துவோம் என்று கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசின் கொள்கைத் திட்டத்தை சபையில் இன்று முன்வைத்து உரையாற்றவுள்ளார். இதன்போது அவர் 13ஆவது திருத்தச்சட்டம் குறித்து அறிவிப்பொன்றை விடுப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறு ஜனாதிபதி அறிவிப்பு விடுத்தால் அதனை முறியடிக்க மகாசங்கத்தினர் களத்தில் இறங்குவார்கள் என பௌத்த தேரர்கள் சிலர் நேற்று ஊடக சந்திப்பொன்றை நடத்தி எச்சரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### அரசாங்கத்தை...

மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் இன்று அடையாளப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நியாயமற்ற வரிக்கொள்கைக்கும் மருத்துவப் பெருநெருக்கடிக்கும் எந்தவொரு தீர்வையும் வழங்காத அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இந்தப் போராட்டம் மிகமிக அவசியமானது என்று சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

இதில் தனியார் துறையில் பணியாற்றும் அனைத்து மருத்துவர்களும் பங்கேற்பார்கள் என்றும், இதற்கு அனைத்து மருத்துவ தொழிற்சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (அ-ம)

### கிளிநொச்சியில்...

இந்த இறப்பு சம்பவித்துள்ளது.

தற்போது அறுவடைக் காலம் என்பதால், நெல்லை உலர விடுவதற்கு போதுமான இடங்கள் கிளிநொச்சியில் இல்லாததால், பல விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்யும் நெல்லை 'காப்பெற்' வீதிகளில் ஒருபக்கத்தை ஆக்கிரமித்து உலர விடுகின்றனர். இதனால் வீதிப் போக்குவரத்து அவ்வப்போது நெருக்கடிக்கு உள்ளாகிறது. இவ்வாறுதான் இந்த விபத்தும் சம்பவித்திருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

கொக்குவிலில் உள்ள தளபாட நிலையத்திற்கு பெண் வேலையாள் தேவை.

074 210 4820

## A/L பௌதிகவியல்

திரு.M.கருணாநிதி BSc(Hons)
(English & Tamil மூலம்)
* 54, கலைமகள் வீதி, அரியாலை
* வெங்கடேசர் வீதி, யாழ்ப்பாணம்.
(New Science Hall அருகில்)

077 618 3064 (CS/23401) 4.6)


## வெள்ளம் வடிந்தோடுவதற்கு உரிய வழிகளை மேற்கொள்க

*திருமுறிகண்டி கிராமமக்கள் கோரிக்கை*

முல்லைத்தீவு, பெப். 8

முல்லைத்தீவு திருமுறிகண்டி கிராமத்தில் மழைகாலத்தில் தேங்கும் வெள்ள நீரை கிளிநொச்சி - கனகாம்பிகைக் குளத்துக்கு வடிந்தோடுவதற்கான வழிகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும் என்று திருமுறிகண்டி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

600 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற கிராமத்தில் மழை காலத்தில் பெருமளவு வெள்ளம் மக்கள் குடியிருப்புகளில் தேங்கி நிற்கின்றது. இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் தொற்று நோய்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. வெள்ளம் வடிந்தோடுகின்ற நீர் வாய்க்கால்களை மண் கொண்டு மூடி இருப்பதன் காரணமாக வெள்ளம் வடிந்தோட முடியாத நிலைமை காணப்படுகின்றது.

ஏ-9 வீதிப் புனரமைப்பின் போது திருமுறிகண்டி கிராமத்தின் வெள்ள நீர் வடிந்தோடுவதற்கான சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. அமைக்கப்பட்ட வாய்க்கால்களை பொதுமக்கள் மண் கொண்டு நிரப்பும் போதும் தடுக்கப்படவில்லை.

இந்த நிலையிலே மழை காலத்தில் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுகின்றது. எனவே வெள்ளம் வடிந்தோடுவதற்கான வழிகளை அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும் என்று கிராமமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-14,13)


## விற்பனைக்கு

பாட்டுவாள், றோதைவாள் பட்டடை விற்பனைக்கு

077 257 7688

## தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல புத்தக விற்பனை நிலையத்துக்கு
**விற்பனைப் பிரதிநிதி (பெண் / ஆண்)**
**உதவியாளர் (பெண் / ஆண்)**
உங்கள் சுயவிபரக் கோவையை
**whats app** செய்யவும்.

077 494 9683,
077 077 6469

## பதவி வெற்றிடம்

சுத்திகரிப்பு, சூழல் பராமரிப்பு மற்றும் பரிமாறுநர் வேலை செய்யக்கூடிய முதியவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**வாருங்கள் விருந்தகம்**
A9 வீதி, முகமாலை, பளை
074 070 5066, 077 711 0329
077 229 9944

## மணப்பெண் தேவை

01. கொடிகாமம் - Jaffna town இந்து கௌரகுடும்பம் (V). 1980. ஆயிலியம். Lawyer, Australiya citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
02. யாழ்ப்பாணம். இந்து. கௌரவகுலம் (V). 1988. ரோகினி. Senior Managment Accountant, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
03. வடமராட்சி. இந்து. கௌரவகுலம் (V). 1974. சித்திரை. Machine Maintanancy, Australiya Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
04. அளவெட்டி . இந்து . கௌரவகுலம் (V). 1983. பூரட்டாதி. MSc.,Quantity Sarueyer, Australiya Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
05. காரைநகர். இந்து. கௌரவகுலம் (V). 1992. மகம். Software Engineer, Australiya Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
06. காரைநகர். இந்து. கௌரவகுலம். (V). 1991. பூரட்டாதி. BSc in civil Engineering Australiya Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
07. சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம் (V). 1992. சதயம். MBBS Doctor, Vegetarian மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. மச்சம் உண்பவர்களும் பரவாயில்லை.
08. ஆனைப்பந்தி. இந்து கௌரவகுலம் (V). 1994. உத்திரட்டாதி. Lawyer, Australiya Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
09. இணுவில். இந்து. கௌரவகுலம் (V). 1994. திருவோணம். ACCA, BIT, MSc, Australiya Citizen, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
10. புலோலி. இந்து. கௌரவகுலம் (V). 1985. உத்திராடம். MBA, MSc, BSc Engineering, LLM, UK, Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
11. நயினாதீவு. இந்து கௌரவகுலம் (V). 1995. விசாகம். MSc in Engineering, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
12. துன்னாலை. இந்து. கௌரவகுலம் (V). 1984. மூலம். Master of Business Administration, Accountant, UK, citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728

## Rotary club of Kilinochchi Town
# Vacancy

**Be A Part of Our Team**

- Rotary club of Kilinochchi Town requires the services of the following staff on their entrepreneurship and industrial development project

**PROJECT MANAGER**

- Minimum bachelor's degree from a recognized university
- Minimum Work experience of three years in project management.
- Responsible for the overall direction, coordination implementation execution control of projects Ensure timely reporting & consistency with club strategy, commitments and goals.
- Interested candidates having required qualification/ experience should send their profiles including references

**FINANCE AND ADMINISTRATION ASSISTANTS**

- Educational background with GCE (A/L) three subjects
- Support and coordinate administrative aspects of the project, and all necessary administrative work related to the project Prepare and maintain all relevant supporting documents related to finance and administration with systematic filing for follow-ups and audits

Interested candidates may send their Cvs to **revjosh.suthakkm@gmail.com** no later than 13 02 2023.

**President**
**RCKT**
**Rotary Centre,**
**Kilinochchi**

(CS 22356)(3/6)

## NEW SCIENCE WORLD
NEW SCIENCE WORLD VICTORY MUST

கணித - விஞ்ஞானப் பிரிவுகள்

**2023 Revision Classes**
**Tamil And English Medium**

**Zoom** இன் ஊடான இணையவழி வகுப்புக்களும் நேரடி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**Physics** } R.Kumaran, R. Kugen

**Chemistry** } Dias, K.T.Sivakumar

**Bio** – N.T. Gajenthiran

**Com.Maths** } K. Ainharan, G.V. Khariharan

ஆரம்பம் :- 23.02.2023 (வியாழக்கிழமை)

**10.02.2023 ஆம் திகதி தொடக்கம் அனுமதிகள் வழங்கப்படும்.**

Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களுக்கு சகல மாவட்ட மாணவர்களும் இவ்வகுப்பில் இணைந்து கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும்:-
021 221 6690, 077 336 4030,
075 836 4055, 077 336 4055

அலுவலக நேரம் :- 8.00am - 5.00pm

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 - 05 - 1944



மறைவு 06 - 02 - 2023

## வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம்

குரும்பசிட்டி றோட், கட்டுவன், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம் கடந்த (06.02.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - கற்பகம் தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னபூரணம் அவர்களின் பாசமிகு கணவரும், அமிர்தராஜ் (காந்தன் - சுவிஸ்), அருள்ராஜ் (றூபன் - ராஜ் பிரதர்ஸ் எலக்ரோனிக்ஸ்), அன்புராஜ் (உதயன் - ராஜ் பிரதர்ஸ் எலக்ரோனிக்ஸ்), அமிர்தரஜனி (பிள்ளை - அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழிற்துறை திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராணி (சுமதி - சுவிஸ்), சியாமளா (ராணி), அகல்யா, சுதர்சன் (சுதா - அபிவிருத்தி உத்தியோகத்தர், வடமாகாண திறைசேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம், கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அபிஷன் (சுவிஸ்), அபிலயா (சுவிஸ்), அபிஷா (சுவிஸ்), அபிலாஷ், ஆகாஷ், அஜீசன், அஸ்வின், அதிசயா, அரீஷ், அன்ஷிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2023) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கலட்டி வீதி,**
**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**
**0777 32 46 48**

(CS/48964)4,6

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


சேர்தி : 021 403 0000 - விளம்பரம் : 021-403 1111 advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தால் ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org